# DEPOSITION OF WITNESS

## In the Court of the District Munsif Cum Judicial Magistrate No.I, Usilampatti.

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC . 11 /2019.** | | |
| **PW/DW/CW** | : | **PW2** | | |
| **Name** | : ஜோதிலட்சுமி | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : விஜயகுமார் | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

(Accused absent u/s.317 CrPC petition filed and allowed)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 18.05.2023

---

**முதல் விசாரணை:**

1. நான் குளத்துப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். அசா.1 எனது அம்மா ஆவார். விபத்தில் இறந்துபோனவர் எனது தாத்தா ஆவார். 5 வருடங்களுக்கு முன்பு விபத்து நடந்தது. அன்றையதினம் இரவு 07:30 மணியளவில் எனது அம்மா இரவு வேலைக்குசெல்வதால் அவரை பேருந்தில் ஏற்றிவிடுவதற்காக நானும், தாத்தாவும் குளத்துப்பட்டியில் உள்ள எங்கள் வீட்டு அருகே உள்ள பேருந்து நிறுத்தத்தில் நின்றிருந்தோம். அப்போது எனது தாத்தா தெற்கிலிருந்து வடக்கு பக்கம் வந்து நின்றுகொண்டு இருந்தார். அந்த இடத்தில் இருட்டாக இருந்தது. அப்போது தேனியிலிருந்து மதுரை நோக்கி வந்த வெள்ளை நிற கார் வேகமாக வந்து எனது தாத்தாவின் மீது மோதி தூக்கி எறிந்துவிட்டு நிற்காமல் சென்றுவிட்டது. பக்கத்தில் பேசிக்கொண்டிருந்த ஜெயராமன், பாண்டி, பெருமாள், பால்பாண்டி ஆகியோர் சம்பவயிடத்திற்கு வந்துவிட்டனர். நானும் எனது அம்மாவும் எனது தாத்தாவை தூக்கி வைத்துக்கொண்டிருந்தோம். ஆம்புலன்சிற்கு போன் செய்து வர தாமதம் ஆனதால் ஆட்டோவில் உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு எனது தாத்தாவை கொண்டு சென்றோம். அங்கிருந்து மதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு மறுநாள் எனது தாத்தா சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

**2.** சம்பவ சமயத்தில் அந்த பகுதி இருட்டாக இருந்தது என்றால் சரிதான். இருட்டாக இருந்ததால் சாலையின் வரும் வாகனங்கள் தெரியாது என்றால் சரியல்ல, கோவிலில் லைட் எரிந்ததால் வெளிச்சம் இருந்தது. எங்கள் ஊர் பூச்சிப்பட்டிக்கு கிழக்கே உள்ளது. எனது தாத்தாவின் அண்ணன் மகனைத்தான் திருமணம் செய்துள்ளேன். எங்கள் ஊருக்கும் பூச்சிப்பட்டிக்கும் இடையே சாலை வளைவாக உள்ளது என்றால் சரியல்ல, பூச்சிப்பட்டியில் வேகத்தடை உள்ளது என்றால் சரியல்ல. நான் வடக்குபக்கம் நின்றிருந்தேன். தாத்தா நன்கு நடந்து வருவார், அதனால் நான் அவரை அழைத்து வரவில்லை. அந்த சாலை வாகனம் போக்குவரத்து அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். நான் தினமும் எனது அம்மாவை வேலைக்கு அனுப்புவதற்காக பஸ்ஸ்டாப்பிற்கு வருவேன். நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல, பார்த்தேன். எனது தாத்தா இறந்ததற்கு இழப்பீடு பெற்றுள்ளோம். விபத்து எதுவும் நடக்கவில்லை என்றும் அசா.1க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் வாகனம் வேகமாக வரவில்லை என்றால் சரியல்ல. இருட்டாக இருந்ததால் நான் விபத்து பார்க்கவில்லை என்றால் சரியல்ல. எனது தாத்தா இரவு நேரம் வாகனம் வருவதை கவனிக்காமல் குறுக்கே கடந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றும் எதிரியின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எனது அம்மா அசா.1 கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S.d./ Jothilakshmi

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.